ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

कृच्छ्राल्लब्धं धनमपि शतांशाधिकप्राप्तिलोभात्
पत्रे किंचिल्लिखितमुपलभ्यैव सद्यस्त्यजामः ।
शास्त्रैस्सिद्धे बहुगुणशताधिक्यलाभे परत्र
व्यर्थाशङ्काकलुषहृदयानोत्सृजामोऽर्थलेशम् ॥

மிகவும் சிரமப்பட்டு சம்பாதிக்கப்பட்ட பொருளை நூற்றுக்கு ஒரு வட்டி கிடைக்கிறதென்று லோபத்தால் ஒரு பேபரில் எழுதிய 10 வரியைப்பெற்றுக்கொண்டு உடனே கொடுத்துவிடுகிறோம். இந்தப்பொருளை .தர்மத்தின் பொருட்டு செலவிட்டால் அற்பம் செலவிட்டாலும் பரலோகத்தில் எவ்வளவோ பாகம் அதிக லாபம் கிடைக்குமென்று பல சாஸ்திரங்களால் சந்தேகத்திற்கிடமில்லாமல் தீர்மானமாய் சொல்லப் பட்டிருந்தாலும் அதை நம்பாமல் வீணான சந்தேகத்தால் கலங்கிய மனதையுடையவர்களாய்க் கொண்டு சொல்ப தனத்தைக்கூட தர்ம காரியத்தில் செலவிடத் துணிகிறோமில்லை.

முன் ஜன்மாவில் செய்த நற்கர்மத்தின் பலனாக இந்த ஜன்மாவில் விசேஷமான பொருளை ஒருவன் அடைந்தால் இதற்கு யாது பயன்? இதனால் செய்யவேண்டியதென்னவென்பதை சற்றுமுற்று நோக்காமல் சொல்ப லாபத்தைக் கருதி, அற்ப கடிதத்தில் சில வார்த்தைகளை யெழுதிப் பெற்றுக்கொண்டு இதுதான் நாமடைந்த செல்வத்திற்குப் பயனென்று நினைத்துப் பிறரிடத்தில் அற்பணம் செய்து விடுகிறார்கள். ஆனால் பொருளைப் பாதுகாப்பதும் விருத்தி செய்வதும் உசிதமாயிருந்தாலும் எதற்காக நாம் இதை விருத்தி செய்கிறோமென்பதையும் கொஞ்சம் கவனிக்க வேண்டும். நல்வழிகளில் தர்ம காரியத்தில் சக்திக்கியன்றவாறு செலவிட வேண்டியே பொருளை ரக்ஷிப்பது. இதற்கிணங்கவே वित्तस्य पात्रेव्ययः செல்வத்திற்குச் சிறந்த பாத்திரத்திலீவதே பயன், என்று பெரியோரும் கூறுகின்றார். ஆகவே தனவந்தர்கள் இவ்வுலகில் தம் சரீர சுகத்தைக் கருதி அதற்காகப் பொருளைச் செலவிடுவதுபோல் பரலோகத்திலும் இவ்விதமே சுகமாயிருக்க வேண்டுமென்று நினைத்து அதற்குச்சாதனமான தர்மமார்க்கங்களிலும் செலவிட வேண்டுமென்று ஓர் பெரியோர் கருதுகின்றார்.

ஆர்ய தர்மம்.
ருதிரோத்காரி-ஹ வைகாசி-மீ கஅவ

பாதிரிமார் பாடசாலைகளில் பெண்களை அனுப்புவதால்
நேரிடும் அனர்த்தம்.

இந்து மதாபிமானிகளான என்றன் அன்பார்ந்த சகோதிரர்காள்! சற்றேரக்குறைய நூறு வருடங்களாக, அயல் நாட்டிலிருந்து வந்த பாதிரிமார் பல்வேறு இடங்களில் ஆங்கில கலாசாலைகளை ஸ்தாபனம்செய்து அஞ்ஞானமெனும்பேரிருளை அகற்றுவர் போலும், ஞானமெனும் ஒளியை மிகவும் கிருபையுடன் பரவச்செய்பவர் போலும் வேஷம் பூண்டு இத்தேசத்திலுள்ள அனேக இந்துக்களை, கிரிஸ்தவர்களாக்கி வருவது பலரும் அறிந்த விஷயமே. மிக்க அருந்தவம் செய்து பெற்றெடுத்த புத்திரர்களை அவர்கள் கலாசாலைகளில் கல்விக்காக ஆசைப்பட்டு விடப்போய், பத்து மாதம் சுமந்து வருந்திப் பெற்று, மிகவும் செல்வமாகச் சீராட்டி வளர்த்த கண்மணிபோன்ற பிள்ளைகளை பறிகொடுத்து கண்ணீருங் கம்பலையுமாய் புலம்பித் திரிபவர் எத்தனை பேருளர்? வரவர, ஆங்கில கலாசாலைகளில் படிக்கும் நமது சிறுவர்கள், பல அநீதிகளை கற்றுக் கொடுக்கும் வில்லிய நூலான பைபிலிலுள்ள (Bible) அளவிலாக் குற்றங்களைச் சின்னபின்னமாகத் தூற்றவே, சிறுவரைத் தனியேயிட்டுக் கொண்டு போய்த் துர்போதனை செய்து, எழுதப் படாத இழிந்த செய்கைக் குட்படுத்தி கிறிஸ்தவராக்குவதோடு, வறுமையின் மிகுதியால் பீடிக்கப் பட்டு, கல்விபயிலும், பல அநாதைப் பிள்ளைகளுக்குச் சோறு போட்டும், (Free Boarding) அம்மதத்தர் சேர்க்கின்றனர். இதுநிற்க; பெண் கல்விச் சாலைகள் ஊர்கள் தோறும் ஏற்படுத்திக் கெடுக்கும் விதத்தையும் மோசத்தையும் பற்றிச் சற்று ஆராய்வோம்:—

பாதிரிமார்கள் சில விடங்களில் பெண் கல்விச்சாலைகளுக்கு இந்துக்கள் பெயரையே வைத்திருக் கின்றனர். இதற்குக் காரணம், இந்துக்கள் தமது பெண்களை கொண்டு வந்து விடுவார்கள் என்னும் கருத்தேயாகும். வீடுவீடாய் நுழைந்து தந்திரவார்த்தை சொல்லி பெண்களையிட்டுக் கொண்டு போகின்றனர். முதலில் பைபில் (Bible) பாடம் வைக்காமல் பெண்கள் தொகை அதிகரித்த பிறகு வைக்கின்றனர். இந்து உபாத்தியாயர்களை வைப்பது போற் காட்டி, பின்னர் கிறிஸ்தவ உபாத்தியாயர்களை நியமனம் செய்து விடுகின்றனர். விக்கிரகங்களைத் தொழுவதைப் பற்றிப்பரிகாசஞ் செய்து, ஆதிகாலந் தொடங்கி தொன்று தொட்டு, இந்துக்களால் மிகுந்த பக்தியுடன் அனுஷ்டிக்கப் பட்டுவரும், வினாயக சதுர்த்தி போன்ற உயர்ந்த மதக் கோட்பாடுகளை தூஷிக்கின்றனர். சுருக்கிச் சொல்லுங்கால், இந்து மதத்தை நம்பாமலும், பைபிலை (Bible)யே நம்பவும், ஏசுநாதரையே (Jesus Christ) தொழவும், ஜபம் பண்ணவும் கற்பிக்கின்றனர்; பைபிலுக்கும், கிறிஸ்து சங்கீதப் பாட்டுக்கும் பாடு படுவது போல, மற்ற பாடங்களில் அவ்வளவு கவனம் செலுத்துவதில்லை. தவிரவும், வாலிப கிறிஸ்தவ உபாத்திமார்கள், அரிய,பெரிய, கோட்பாடுகளை நன்குபுகட்டும் நம் சாஸ்திர வசனங்களுக்கு முற்றிலும் மாறான, மேல் நாட்டு நடையுடன் இந்துப் பெண்களுடன் பழகத்துடங்கு கின்றனர். "ஆடு நனைகிறதென்று ஓனாய் குலுங்கிக் குலுங்கி அழுகிறது" என்னும் பழமொழி போல், பறைச்சாதிக் கிறிஸ்தவச்சிகள் இந்துக்கள் வீட்டிற்குட் போய், இந்து மாதர்களுக்கு கல்வி, தையல் கற்பித்துத் தருவது போல் மேலுக்குக் காட்டி இந்து மதத்தை இகழ்ந்து, நினைப்பதற்கும் யோக்கிதையில்லாது, பாகவதம் முதலிய புராணங்களிலிருந்து திருடியெழுதப்பட்டதென்று ஆங்கிலேயரே சொல்லும் வில்லிய புத்தகமான பைபிளை போதித்து, பேதைப் பெண்கள் சித்தங்கலங்கி விடச்செய்கின்றனர். யௌவன மங்கையரை கோச்சு வண்டியிலேற்றி கிறிஸ்தவர் பிரசங்கங்களுக்கு இட்டுக்கொண்டும் போகின்றனர்.

இங்ஙனம் மேனாட்டு நாகரீக மெனும் பேய் பிடித்து, இவர்கள் சூதையறியாத பேதைகளான நம்மவர் அவர்கள் கூறுவதை மெய்யென நம்பி மோசம் போவது என்ன புத்தியீனம்?

(இன்னும் வரும்)

திருவானைக்காவல் ஸ்ரீ அகிலாண்டேசுவரி
தாடங்கப் பிரதிஷ்டா மகோத்ஸவம்.

இம்மகோத்ஸவம் திருச்சினுப்பள்ளிக்கடுத்த ஜம்புகேச்வர க்ஷேத்திரமாகிய திருவானைக்காவலில் நிகழும் ருதிரோத்காரி வருடம் சித்திரை-மீ 16-ம் தேதி பானுவாரத்தில் வெகு விமரிசையாய் நடந்ததென்பது யாவருக்கும் தெரிந்திருக்கும். இம்மகோத்ஸவத்தின் விமரிசையைச் சொல்வதென்ற ஸங்கற்பத்துடன் நான் ஆரம்பித்தாலும் எனக்கு ஒருவிதத்திலும் மனோரதம் பூர்த்தியாகாதென்பது திண்ணம். ஏனெனில் நான் கண்ணால்க் கண்ட வைபவத்தை எழுதுவதென்பது சாத்யமானதல்ல. புத்திக்குப்பட்டதைஎழுதினால் அச்சமயம் அங்குவந்திருந்த லக்ஷக் கணக்கான ஆஸ்திகர்கள் இப்பத்திரிகையைப் பார்த்தால் "நடந்தவைபவத்தைப்பற்றி இவ்விதந்தானா எழுதுகிறது? இன்னும் எத்தனையோ மடங்கு குணாதிசயங்களைக் குறைத்துக் கொடுத்துவிட்டனரே" என்பார். அச்சமயம் வராத ஆஸ்திகர்களும் இவ்வைபவத்தைத் தனது பந்துக்கள் ஸ்னேகிதர்கள் மூலமாய் பலவாறுகேட்டு பச்சாத்தாபத்தை அடைந்துகொண்டிருக்கும் போது இப்பத்திரிகையைப் பார்க்க நேரிடின், "ஆகா எவ்வளவோ விதமாய்ப் பலபெயர்கள்மூலம் கேழ்விப் பட்டவிஷயத்திற்கும் இது மிகக்குறைவுதான் எது உண்மையோ" வென்று சஞ்சலப்பட வாரம்பிப்பார்கள். இதை எல்லாம் யோஜிக்குமளவில் சின்னதீக்ஷிதாவர்கள் ஆனந்தஸாகரஸ்தவத்தில்,

त्वं देवियादृगसि तादृगसि त्वमीदृगे
षेति वक्तुमवबोद्धुमपि क्षमः कः ।
मामेव तावदविदन्नतिपामरोऽहं
यातः स्तुतिं त्वयि समर्पयितुं विलज्जे ॥

தேவியே உன்னைப் பற்றி நான் ஸ்துதிசெய்கிறேன். உன் சொரூபம் எப்படியிருக்கிறதோ அப்படித்தானிருக்கிறாய். நீ இப்படிப்பட்டவள் அப்படியிருக்கிறாய் என்று சொல்வதற்காவது அறிவதற்காவது யாருக்கு சக்தி உண்டு. என்னையே இன்னானென்று தெரிந்து கொள்ள சக்தியில்லாத பாமரனான நான் உன்னிடத்தில் என் ஸ்துதியை ஸமர்ப்பணம் செய்ய மிகவும் வெட்கிக்கிறேன் என்றபடி தாடங்கப்பிரதிஷ்டா மகோத்ஸவம் எப்படியிருந்ததென்றால் அங்கு நடந்தபடிதானிருந்தது பார்க்காதவர்கள் பார்த்தவர்களைக் கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிடலாம். ஆனால் அப்படிச்சொல்லப் பத்திரிகையில் எழுதவேண்டாம். ஆதலால் இதைப் பார்க்காமலும் கேட்காமலுமிருக்கிற ஆஸ்திகர் யாராவதொருவர் இப்பத்திரிகையைப் பார்க்க நேரிட்டால் அவர் ஒருவருக்காவது இது உபயோகமுள்ளதாகுமென்று விஷபத்திலிறங்குவாம்.

இம்மகோத்ஸவத்தில் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மனுக்கு தாடங்கமென்னும் காது ஓலை சாத்துவது தான் முக்கியம். இதன் வரலாற்றைக் கொஞ்சம் சொல்லிவிட்டுப் பிறகு உத்ஸவத்தின் விமரிசையை வரைவாம். இந்த ஜம்புகேச்வரம் என்னும் க்ஷேத்திரத்தில் ஆதியில் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்பிகை பரமேசுவரனை நோக்கித் தவத்திலமர்ந்தனள். அக்காலம் வரவா அவ்வம்மைக்கு உக்கிரமான கலையேறிவிட்டது. அதனின்றும் அவ்வூர்வாசிகளில் யாராவதொருவர் அநாசாரம் கலந்தாலோ அல்லது எத்தகைய அறியாக்குற்றத்துடன் அவ்வாலயத்தினுள்ளேயோ அல்லது அவ்வம்மையின் சன்னிதியிலோ சென்றால் அவனது உயிர் நமனுக்கே என்றாக்த் தலைப்பட்

டது. இவ்விதம் நாளுக்கு நாள் இக்கஷ்டமதிகப் படவே அநேக மகான்களாலும் மஹாமாந்திரிகர்களாலும் அக்கலையை குறைக்க யத்தனித்தும் அதனல் கொஞ்சமும் பலனேற்படவில்லே, பிறகு இக்கோரகலேயை சாந்தப்படுத்த மஹான் யார் வருவாரென்று கொடிப்பொழுதையும் யுகப்பொழுதாய்க் கழித்துக் கொண்டிருக்கும்போது நமது பரமகருணாமூர்த்தியாய் கனகலேயினின்றும் அவதரித்து தூர்மதகண்டனமும் ஷண்மதஸ்தாபனமும் செய்து திக்விஜயயாத்திரையாய் வரும் பகவத்பாதமூர்த்தி தற்செயலாய் அந்த க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்யவே அந்நகர்வாசிகள் அக்கருணாமூர்த்தியைக் கண்டு தரிசித்து அவரது மகிமையைச் சீடர்கள் மூலமாய்க்கேட்டதும் அவர்களுக்குண்டான ஆநந்தத்தைப் பொங்கிவரும் பாற்கடலுக்கொப்பிடலாமா? எவ்விதந்தான் அளவிட்டுச் சொல்வதென்பதை நீங்களே யோஜியுங்கள். உடனே அவர்கள் கூடி பகவத்பாதாது திவ்யசரணகமலங்களில் விழுந்து "கருணாமூர்த்தியே! எங்களது கஷ்டத்தை விலக்குகிறதாய் வாக்களித்தால்தான் விடேகுவோம். இல்லேயேல் கதியில்லே" என்று நேர்ந்த கஷ்டங்களேச் சொல்லி அலறினர். இதைக்கேட்டுக் கருணாமூர்த்தி கொஞ்சமும் சகிக்காமல் சிஷ்யர்களே பயப்படாதீர்கள்! அம்பாளிடம் நான் கேட்டுத்தணியச் சொல்கிறேன். என்று அபயவாக்களித்து விட்டு ஆசார்ய மூர்த்தி உடனே அம்பாளுடைய ஸன்னதியில் யோகநிஷ்டையிலமர்ந்து அவளது பிரஸன்னத்தை வேண்டினர். பிறகு அம்மனின் உக்கிரக்கலேயை எப்போதும் சாந்தமாய் இருக்கும்படி செய்வதற்கும் அவளது ஸன்னிதியில் வருபவர்களே எறிக்காமலிருக்கும் பொருட்டும் அவளுக் கெதிரில் அவளது மூத்தகுமாரன் கஜமுகனே பிரதிஷ்டை செய்து அக்கணபதியின் தென்புறமாய்த் தானும் மௌனநிஷ்டையிலமர்ந்தனர். இப்போதும் அகிலாண்டேசுவரி ஸன்னிதிக் கெதிரிலிருக்கிற மகாகணபதியின் பக்கத்தில் அவ்வாசார்ய மூர்த்தியும் எழுந்தருளியிருக்கிறதைப் பார்ப்பதற்கு வெகு ஆச்சரியமாய் இருக்கிறது. மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிதென்று தமிழ்ப் பழமொழிக்கும்

क्रियासिद्धिः सत्वे भवति महतां नोपकरणे

மகிமையான ஸத்வத்தில் கார்யசித்தி ஆகுமேயொழிய ஸாதன ஸமான்களாலல்ல வென்ற ஸம்ஸகிருத மொழிக்குமிணங்க அம்மகான் சிறிய மூர்த்தியாய் இருப்பதைப் பார்த்தால் ஏதோ ஒருபுத்தகாலயத்தில் பிராசீனமான ரிகார்டில் அழகிய நமதுபுத் தமதமானது ஒரு முழநீளப் பார்ப்பாரசன்னியாஸியால் நாசம் செய்யப் பட்டு விட்டதே என்று எழுதிவைத்திருப்பதாய் எமது ஆசார்யரவர்கள் உபன்யாஸத்தில் அடிக்கடி சொல்வது ஞாபகத்திற்கு வந்தது. இவ்விதம் இம்மகான் எதிரிற்செல்லும் அம்பாளது பார்வையைக் கணபதியால் தடுத்தவுடன் பக்கங்க ளிற்பரவ ஆரம்பித்ததாம். அதை அறிந்த நம் ஆசார்யர் அடங் காத அக்கலையை இனி விடக்கூடாதென்றெண்ணி அழகிய இருதாடங்கங்களைச் செய்து அதில் ஸ்ரீ யந்திரத்தை வரைந் து அதை அம்பாளின் எதிரில் வைத்து நிமிஷத்தில் பூர்ணகலை யையும் அதிலிறக்கினர். அது முதல் அம்பாளின் சக்தி வெளி யிற்பரவவில்லை. அனுசாரனோ அக்கிரமஸ்தனோ சாதுவோ மற்ற யாருக்கும் அம்பிகையாற் கெடுதலேற்படவில்லை, நம்மாசார்யர் இது ஒன்று செய்தனர். ஸர்வக்ஞ பீடாரோகணம் செய்த தையும் காஞ்சியில் காமாக்ஷீ தேவியையும் இவ்வாறே யந்திரத் தில் மாத்தி அங்கு காமகோடீ பீடத்தை ஸ்தாபித்ததையும் நினைத்தால் இம்மகான் சங்கரன்றானென்று சொல்லவும் வேண் டுமோ? ஆதல் பற்றியே இம்மகானால் ஸ்தாபிக்கப் பட்ட காம கோடீபீடத்திலேற் பட்ட பிருதாவளியில்

निखिलभुवन चक्रप्रतिष्ठापकश्रीचक्रप्रतिष्ठाविख्यातयशोलंकृतानां

என்றும் சொல்லப் படுகிறது. இது மட்டுமா? ஸ்ரீ மதாசார் யர்களது அஷ்டோத்தர சதநாமாவளியிலும்

श्रीचक्रात्मकताटङ्कपोषितांबामनोरथः ।

என்றும் ஏற்பட்டிருக்கிறது. இதனால் வெளியாவ தென்னவெ ன்றால் ஸ்ரீசக்கிரரூபமான காது ஆபரணத்தினால் அம்பிகையின் அபீஷ்டத்தையும் நிறப்பினார் என்றேற் பட்டது. சிலமந்திர

சாஸ்திர காரர்கள் தேவதைக்கு விரோதமாயும் சிலவிடங்களில் மந்திரசக்தியால் ஆகர் ஷணம் செய்து நிறுத்துவதுண்டு, அவ் விதம் செய்வதால் அந்த தேவதை மந்திரம் ஒளஷதங்களால் க ட்டுப்பட்ட சர்ப்பம் போல் சீறிக்கொண்டும் ஸமயம் பார்த்துக் கொண்டிருக்கும். அது காலாந்தரத்திற்கெடுதலை விளைவிக்கும் அ ப்படி இங்கில்லை. அம்பிகைக்கு இவ்விதம் காது ஓலையில் ஜ்வலித் துக் கொண்டு நித்யவாஸம் செய்வதில் தனக்கு மிகுந்த சந்தோ ஷம் என்பதையும் இன்னுமாவளி காட்டுகின்றது. ஆதல் பற்றியே இந்த தாடங்கத்தை சாத்தித் தான் அம்பாளுக்கு நித்யபூஜை முதலிய உபசாரங்கள் இங்கு நடக்கிறது. இத்த கையதாடங்கம் ஸ்ரீமத் பகவத்பாதர்சாத்தியதால் இதில் கா லாந்தரத்தில் ஏதாவது சீர் குறைவு நேரிடலாமென்று தோன் றினும் அல்லது அதிகவருஷம் ஆகிவிடாலும் அதை சீர்திருத்தி பழயபடியும் பிரதிஷ்டை செய்ய அப்பரம் பரையில் பீடாதி பதிகளாய் விளங்கி வரும் சங்கராசார்யருக்கே பாத்யம் என் பது விவாதமின்றி ஒற்றுக் கொள்ளத் தக்க தென்று அது முதல் காஞ்சீ காமகோடீ பீடாதி பதிகளான லோகாசார்யர் களே நடத்தி வருகிறார்கள். அவ்விதம் நடத்திவரும் இப்பரம் பரையில் சுமார் 70-வருடங்களுக்கு முன் இந்தப் பிரதிஷ்டை நடந்திருப்பதாய்ச் சொல்கிறார்கள். பிரதிஷ்டை யென்பது தாடங்கங்களிலுள்ள தேவியின் கலையை கடத்தில் ஆகர்ஷணம் செய்துவைத்து அவைகளை சீர்படுத்திப் பிறகு அவைகளில் ஸ்தாபிப்பதே. இச்சமயம் ஏராளமான வேதபாராயணமும் சாஸ் திர இதிகாஸ புராண மந்திர பாராயணங்களும் நடக்கும். இம்மகாவைபவத்தை இப்போதுள்ள நமது நேத்திரத்திற்கும் காதுக்கும் ஆத்மாவுக்கும் பரமாநந்தத்தைக் கொடுக்கும்படியும் இதன் மூலம் ஆஸ்திக்யத்தையும் பரலோக சாதகத்தையும் வா ரிக் கொடுத்த நமது பரமாச்சார்யாளாய் லோகஹிதத்திற் காகவே திருவவதாரம் செய்த பரம குருமூர்த்தியான காம கோடீ பீடாதிபதிகளான ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிந்திராளுடைய வைபவத்தையும் அவர்கள் நடத்தி வைத்த பிரதிஷ்டையின் விமரிசையையும் இனி விரிப்பாம்.

லோக குருவின் வருகை.

ஆர்யர்களே? இதற்கு முன் நான் கூறியபடி நமது முன்னோர்களின் பெருந்தவத்தின் பயனும் நம் மதத்தைக் காப்பாற்றி நம்மையும் அனுயாஸமாய் ஈடேறச் செய்யத் திருவவதாரமாய் எழுந்தருளிய காமகோடி பீடாதி பதிகளான சந்திர சேகரேந்திர ஸரஸ்வதீயதீந்திரரான சங்கராசார்ய ஸ்வாமிகள் இவ்விதமான பிரதிஷ்டையைச் செய்ய வேண்டி ஸங்கற்பித்தவர்களாய்த் தமது நித்யவாஸ ஸ்தலமான கும்பகோணம் ஸ்ரீ மடத்திலிருந்து சென்ற காளயுக்தி வருடம் தை மீ 21-வ யன்று விஜயயாத்திரையாய்ப் புறப்பட்டார்கள். அது முதல் நாளதுபரியந்தமும் ஆங்காங்கு ஜில்லாக்களிலும் அதன்கிராமங்களிலும் இனி நகரங்களிலும் ஆஸ்திக சிஷ்ய கோடிகளால் பிரார்த்தனையுடன் வரவேற்கப்பட்டு அனுக்கிரகித்தும்திவ்யோபதேசங்களாலும் திவ்ய ஆராதனங்களாலும் திவ்ய ஆசார அனுஷ்டானங்களாலும் சிஷ்ய சிக்ஷையையும் நாஸ்திகனது மனதில் நடுக்கத்தையும் ஆஸ்திகர்களது மனதில் சந்தோஷத்தையும் செய்து வருகிறார்களென்பதையும் யாவருமறிவார்கள். அவ்விதம் லோக குரு தஞ்சாவூர் ஜில்லாவில் பெரும் பாகங்களில் விஜயம் செய்து பிறகு சென்ற வருடத்தில் ராமேசுவர யாத்திரை செய்து பிறகு மதுரை ஜில்லா திருநெல்வேலி ஜில்லாக்களிலும் விஜயம் செய்து திவ்யக்ஷேத்திரமாகிய திருவானைக்காவலுக்கு எழுந்தருளினர். இதனிடையில் ஆங்காங்கு ஸ்ரீதாடங்கப் பிரதிஷ்டையின் வைபவத்தைப் பற்றி உபதேசித்துப் பிறகு அதற்காக அழகான பத்திரிகைகளிலும் அச்சிட்டு உலகிற் பரவச்செய்து மகிமையை வெளியிட்டனர். லோக க்ஷேமார்த்தம் இக்காரியம் என்பதை வெளியிடவே நம்தேசமெங்கும் பரவச் செய்தது போல் மைசூர் ஸமஸ்தானம் ஸ்ரீங்கேரிப் பிராந்தம் முதலிய விடங்களுக்கும் சிஷ்யர்களை அனுப்பியும் பத்திரிகை மூலமாயும் அங்கும் வெளியிடச் செய்து அங்கிருந்தும் ஆஸ்திகர்களையும் பண்டித ரத்தினங்களையும் தருவித்

தனர். இதில் ஸ்ரீங்கேரிக்கு சமீபத்திலுள்ள கிராமவாசியான ஓர் தனிகரான பிராமணர் இவ்வைபவத்தையும் நமது பரமாச்சார்யர்களின் மகிமையையும் கேட்டு இச்சமயம் இம்மகிமையையும் ஸ்ரீ மதாசார்யாது திருவடிகளையும் தரிசிப்பது தான் மேன்மை என்று கொண்டு தனது பௌத்திரியின் விமரிசையான விவாஹம் நடந்துகொண்டிருந்தும் மூன்றும் நாளிலேயே தனது புத்திரர்களில் ஒருவரோடும் மற்றும் சில ஆஸ்திகர்களோடும் திருவானைக்காவலுக்கு வந்திருந்தது கவனிக்கத்தக்கது. இவர் அங்கிருந்து உத்ஸவத்தையும் ஆசார்யரையும் சேவித்துவிட்டுப் பிறகு ராமேசுவரம் போய்விட்டு மறுபடியும் திரும்பி வந்து ஆசார்யாது திருவடிகளில் விழுந்து ஸேவித்து இன்னும் பல பிரமுகர்கள் இவ்வைபவத்திற்கு வரவேண்டுமென்று அந்தரங்க பக்திபுடன் தீர்மானித்திருந்தும் பல அசௌகர்யங்களால் வரமுடியாமலானதென்றும் அவர்கள் சாணுனுக்கிரகத்திற்கு எதிர்பார்த்திருக்கிறார்களென்றும் எங்களது தேசத்திற்கு திவ்ய சன்னிதானம் எழுந்தருளி எங்கள் தேசத்தையும் எங்களையும் கிருதார்த்தர்களாய்ச் செய்ய வேண்டுமென்றும் எனது ஸ்னேகிதப் பிரபுக்களான ஆஸ்திகர்களும் ஸன்னிதானவரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்களென்றும் அவர்களுக்கும் அனுக்கிரக பூர்வமாய் ஸ்ரீமுகம் தந்தருளவேண்டுமென்றும் பிரார்த்தித்தனர். ஆசார்ய மூர்த்தியும் அவரது பக்திக்கு ஈடுபட்டுத் திரிபுரசுந்தரியின் அபிப்ராயம் அப்படியிருந்தால் சீக்கிரம் உமது பிரார்த்தனை நிறைவேறலாம் என்று திருவாய் மலர்ந்தருளி அவர் பிரார்த்தனைக் கிணங்கி அவரான் குறிக்கப் பட்ட பக்தர்களுக்கும் ஸ்ரீமுகமும் பிரஸாதமும் ஆக்ஞாபித்தனர். பிறகு அதைப் பெற்றுக் கொண்டு அவர் புறப்பட்டனர். இது இங்கு பிரகிருத மில்லை யாயினும் தமிழ் பாஷை தெரியாத அவர் தூரதேசத்திலிருந்து வந்து இவ்வளவு தூரம் பிரார்த்தித்ததை இத்தருணம் சொல்லாமல் விட என் மனம் துணிய வில்லை யென்பது கொண்டு இதை வெளியிட்டேன். இனி இப் பிரகிருதத்தை கவனிப்போம்.

நான் முற்கூறியபடி நம்மகான் இப்பிரதிஷ்டை செய்வதற்காக பழனிபோய் தரிசனம் செய்துவிட்டு திண்டுக்கல் நத்தம் விராளிமலை மார்க்கமாய்ப் புதுக்கோட்டைக்கு எழுந்தருளினர். அங்கு அரண்மனையிலும் மற்றும் நகரவாஸிகளாலும் நன்கு ஆராதிக்கப்பட்டு நாளது ருதிரோத்காரி வருடம் சித்திரை-மீ 10-ம் தேதி திங்களன்று சாயந்திரம் சுமார் 5-மணிக்கு திருச்சிக்கு அபிமுகமாய் விஜயம் செய்யும் ஸ்ரீ லோககுரு அவர்களை திருச்சிநகர வாஸிகள் பூர்ணகும்பத்துடனும் புஷ்பம் பழம் முதலிய சாமான்களுடனும் எதிர்கொண்டு காத்திருந்து திருச்சிக்கு 5-மைலுக்கப்பால் புதுக்கோட்டை ரஸ்தாவிலிருந்து அழைத்துவந்த காக்ஷியை ஆயிரம் கண்பெற்ற இந்திரன் தான் பூரணமாய் அனுபவித்திருக்கலாம். இரண்டாயிரம் நாவுபெற்ற ஆதிசேஷன் அப்படியே வந்து நம்மிடம் சொன்னால் ஒரு ஸமயம் பூரணமாய்ச் சொன்னதாய் ஆகலாம். அம்மாதிரி எதிர்கொண்டழைப்பு இதற்குமுன் ஒருபோதும் நடந்ததில்லையென்றும் இனியும் இவ்விதமாய் வைதிகர்களும் ஆஸ்திகர்களும் கூடுவது எச்சமயமோ வென்றும் ஆச்சரியப்படுகிறார்கள். அச்சமயம் லக்ஷக்கணக்காய் ஜனங்கள் கூடியிருந்தனர். ஸ்ரீ ராமன் திருவவதாரத்தின் போது அயோத்தியிலுள்ளவர் எல்லோரும் தன் உத்ஸவமென்று வீடுகளில் தானாகவே கொண்டாடியது போல் வீதிகளில் ஒவ்வொரு வீட்டிலும் தோரணங்களாலும் வாழைமரங்களாலும் சித்திரமான காயிதக்கத்திரிப் பூக்களாலும் வீடுதோறும் விதம்விதமான தீபங்களாலும் வாயில்களில் சித்திரகோலங்களாலும் ஜகத்குருவே வருக. ஷண்மதஸ்தாபனாசாரியரே வருக. தாடங்கப்பிரதிஷ்டா பத்தகங்கணரே வருகவென்று ஆங்காங்கு விசித்திரமாய் எழுதிய வளைவுகளாலும் ஏற்பட்டிருந்த அலங்காரத்தையும் ஆயிரக்கணக்கான காஸ்லைட் அலங்காரங்களையும் கண்ணுற்று தரிசித்த புண்யவான்கள் அச்சமயம் அப்பட்டணத்தை இந்திரலோகமோ பலிசக்கிரவர்த்தியின் ஊர்வலமோவென்றும் பலவாறு புகழ்கின்றனர். அச்சமயம் கிளம்பியபூமியின் தூளியைப்பார்த்தால் ஸ்ரீபூமிதேவியே யாவரும் பார்க்க தன் சரீரத்துடன் விண்ணுலகமேகித் தன்

தோழியானஸ்வர்க்கலோகத்தைப்பரிகசிக்கப்போகின்றனளோ வென்றும்நினைக்கலாம். இவ்விதமகாவைபவத்துடன் புறப்பட்டு ஜனங்கள் சூழப்பலவித வாத்யகோஷங்களுடன் இரவு 1½-மணி சுமாருக்குத் திருவானைக்காவலுக்குச்சென்று அச்சமயம் சுமார் 100000 ரூபாய் செலவிட்டு செப்பனிடப்பட்ட ஆசார்ய திவ்ய மடத்தில் விசித்திரமாய் அலங்கரிக்கப்பட்ட கொட்டகையின் மத்தியில் ஸ்தாபிக்கப் பட்டிருந்த திவ்ய ஸிம்மாஸனத்திலமர்ந்து ஏராளமான பக்தகோடிகளை மந்திராக்ஷதைகளாலனுக்கிரகித்து அனுக்கிரகத்துடனனுப்பினார்கள். பிறகு புதன்கிழமை விக்னேச்வர பூஜைசெய்து திவ்ய முகூர்த்தத்தில் ஆகமத்திற் கூறிய லக்ஷணப்படி ஏற்பட்ட யாகசாலைகளில் ஹோமம் பூஜை முதலியவை விதிப்படி ஆரம்பிக்கப்பட்டு அம்மன் கோவிலில் அம்மனின் பாலப் பிரதிஷ்டையும், ஸ்வாமி கோவிலில் ஸ்வாமிக்கும் யாகசாலை தனித்தனி ஏற்பட்டிருந்தது. மூன்று வேதபாராயணத்திற்காக இரண்டு கோவில்களிலும் தனித்தனியாய் ஏராளமான வேதவித்வான்களும் பாஷ்யம் முதலியவைகளின் பாராயணத்திற்காக சாஸ்திரக்ஞர்களும் ஏற்பட்டுநடந்த பாராயணத்தின் விமரிசையையும் செப்பத்தரமன்று. ஆசார்யஸ்வாமிகள் மடத்தில் ஸ்ரீ திரிபுர சுந்தரீஸமேத சந்திரமௌளீசுவரரின் பூஜாக்கிரமத்தையும் ஆசார்யர்கள் அனுஷ்டித்து வந்த நியமத்தையும் தரிசித்தவர்களுக்கு மனதில் உண்டான ஆனந்தத்திற்களவல்ல. பிரதிதினமும் ஸ்ரீ மடத்தில் ஒவ்வொரு வேளைக்கும் சுமார் 3000-க்குக்குறையாத பிராமணர்களுக்கு உபசாரத்துடன் அளிக்கப்பட்ட போஜன சௌகர்யம் மிகவதிகந்தான். இதுவன்றி தேப்பெருமாநல்லூர் சிவன் என்பவர் ரங்கூன்ரெட்டியார் சத்திரத்தில் உபசாரத்துடன் ஏராளமான பிராம்மணோத்தமர்களுக்கு அன்னமளித்ததுடன் மற்ற ஜாதிக்காரர்களுக்கும் தனியாக வேறு கட்டடத்தில் ஏராளமானதாய் அளித்த அன்னத்திற்குமளவல்ல. பிரதிதினமும் மாலை 4-மணிக்குமேல் பண்டிதோத்தமர்களின் திவ்யோபன்னியாஸம் நடைபெற்றது உத்ஸவத்திற்கென்று வந்திருந்த கனவான்களுக்கும் பண்டிதர்களுக்கும் அவரவர்கள் சௌகர்யத்திற்கேற்ற ஜாகைகளும்

அவர்களைத்தகுந்தபடிஉபசரிக்கத்தக்க மனிதர்களையும்ஏற்படுத்தியிருந்தது வெகு விமரிசையானது. ஜனங்களின் தீர்த்த சௌகர்யத்திற்காக கோவில் வடக்கு வீதியில் ஸ்ரீ மடத்தின் ஸமீபமாக அனேக குழாய்கள் அமைக்கப் பட்டிருந்தன. இது தவிர தண்ணீர்ப்பந்தல்களின் சௌகர்யமும் ஏராளமாய் அமைக்கப் பட்டிருந்தன. இத்தகைய சௌகர்யங்களை அனுபவிக்கும் சகல ஜனங்களும் ஆசார்யாரவர்களின் மகிமையை தியானஞ் செய்துகொண்டு தன் கிருகங்களையே மறந்துவிட்டு இது தான் நமக்கேற்பட்ட ஸ்தானமென்று ஆசார்ய தரிசனத்தையும் மடத்தில் உண்பதையும், அங்கேயே உறங்குவதையும், கைக்கொண்டார்கள். பிறகு குறிப்பிட்ட 16-ம் தேதிகாலை 6 மணி முதல் நான்கு கோர்வில் வாயில்களிலும் கணக்கற்ற போலீஸ் படை பந்தோபஸ்து செய்ய வந்துகூடினர். 'அம்மன்கோவில் முதற்பிரகாரம் பிரவேசிக்க' 'ஸ்வாமிகோவில் முதற்பிராகாரம் பிரவேசிக்க' என்று பலவிதமாய் அச்சிடப்பட்ட டிக்கட்டுகள் பெற்று உள்ளே வெகுஜனங்கள் பிரவேசித்தனர். பிறகு சுமார் 9-மணிக்கு ஸ்ரீமத் பரமாசார்யரவர்கள் ஏராளமான போலீஸ் படைகளாலும் குடை முதலிய பலவித பிருதுகளாலும் வாத்தியகோஷங்களாலும் வாலண்டியர் படைகளாலும் சூழப்பட்டு ஸமஸ்தஜனங்களுக்கும் நேத்திரானந்தத்தை கொடுத்துக் கொண்டு ஸ்ரீமடத்தினின்றும் எழுந்தருளி கோவிலில் வடக்குவாயில் சென்றதும் கணக்கில்லாத பக்தகோடிகளின் நெருக்கத்தால் சிரமப்பட்டு ஆசார்யரவர்கள் மட்டிலும் உட்பிரவேசிக்க நேர்ந்ததே தவிர பிருதுகள் முதலியவைபோக முடியவில்லை. இவ்விதம் குரு மூர்த்தியே மிகுந்த சிரமத்துடன் அம்பாளின் திவ்யஸன்னிதி சென்று பாலஸ்தாபன கடத்தின் அபிஷேகம் செய்வித்துதன் இருகாகமலங்ளிலேந்திய இரு தாடங்களையும் கண்ணாரதரிசித்தும் கண்களில் ஒத்திக்கொண்டும் ஆனந்தக் கண்ணீரால் நன்கு அபிஷேகம் செய்து துடைத்து அவைகளை அச்சமயம் ஸ்ரீமதகிலாண்டேசுவரி அம்பாளின் திவ்ய திருமுகத்தில் காதுகளில் சாத்தின வைபவத்தை எவ்விதம் எழுதமுடியும்! எவ்விதம் வர்ணிக்கமுடியும்! அச்சமயம் அம்மகோத்ஸவத்

தின் ஆனந்தத்தைப் பூராவாக அனுபவித்தவர்கள் நமது லோக குரு மூர்த்தியான காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான சந்திர சேகரேந்தி ஸரஸ்வதீய மீந்திரரும் அம்மகானுக்குப் பக்கத்தில் நிற்பதாய்த் தென்பட்ட ஆதிபகவத் பாதரும் இந்திராதி தேவர்களுந்தான். இதை ஏன் இவ்விதம் சொல்கிறேனென்றால் அவ்விதம் தாடங்கப் பிரதிஷ்டையை நடத்திவிட்டு வெளியிற் பிரஸன்னமாய் எழுந்தருளிய ஆசார்யாது முககமலத்தைப் பார்க்கும் போது அம்மகான் ஆதிபகவத் பாதர் இவர் தானோ. இக்காலத்தில் நம் பேரில் கருணை கொண்டு தாடங்கப் பிரதிஷ்டைக்காகவே மறுபடியும் தோன்றினரோ! அல்லது ஸமஸ்த தேவதைகளின் அம்சத்தையும் வகித்த ஓர் மகானோ! என்றெல்லாம் தோன்றிற்று. இவ்விதம் அதிவிமரிசையாய் நடந்தேரிய காக்ஷியை எவ்விதந்தான் சொல்லிமுடியும் இவ்வளவுக்கும் முக்யமான காரணமாகிய தாடங்கத்தின் மகிமையை இங்கு சொல்லாமல் விடுவது உசிதமல்ல. இத்தாடங்கமிரண்டும் ஆதிபகவத் பாதரால் ஸ்வர்ணத்தில் செய்யப்பட்டும் அதில் ஸ்ரீசக்ரயந்திரம் வரையப் பட்டும் ரத்தினங்களிழைக்கப் பட்டும் இருக்கிறது. இதை மறுபடி ரிப்பேர் செய்தே அந்தந்த காலங்களில் ஆசார்யர்கள் பிரதிஷ்டை செய்வது வழக்கம. அதுபோல இச்சமயமும் ரிபேர் செய்வதை சென்னையில் பிரபல கனவானும் பிரபல வியாபாரியுமான T. R. டாகுர் என்னும் பிராமணோத்தமர் ஏற்றுக் கொண்டனர். இந்தப்புண்ணியவான் இந்த தாடங்கமிரண்டையும் பகவத் பாதாசார்யரால் ஸ்தாபிக்கப் பெற்ற ஸ்ரீசக்ரம் கெடாமலும் அதன் மேலேயே ஏராளமான நவரத்தினங்களைப் பதித்து மேலேயும் ஸ்ரீ சக்ரம்போல் ரத்தினக்கட்டடமே காணும்படி திறமையாய் சுமார் 30000 ரூபாய் செலவு செய்து கட்டி அவைகளைத் தானே சென்னையிலிருந்து கொண்டு வந்து ஸன்னிதானத்திற் சமர்ப்பித்து அம்மகோத்ஸவ தரிசனத்தையும் பரிவாரங்களுடன் வந்திருந்து செய்தனர். இக்காலத்தில் இவ் வரிய கைங்கரியத்தைச் செய்த இப்புண்ணியவானுக்கு வம்சபரம்பரையாய் யாதொரு குறைவும் வாரமல்

தலோகாக்க நம்மாசார்யருடைய பரம கருணையும் அகிலாண்டே சுவரியின் அனுக்கிரகமும் கொஞ்சமும் பின்வாங்கா தென்ப தற்கு யாது தடை. இனி இதற்குமேலேற்பட்ட வித்வத் ஸன் மானம் முதலியதை விவரிப்பாம்.

அறிவாளர்களே! முன் நான் தெரிவித்தபடி தாடங்கப் பிரதிஷ்டை விமரிஸையாய் நடந்தபின்னர் மருநாள் திங்க ளன்று ஸ்ரீமகாஸ்வாமிகள் காலையில் நித்யானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வேதஸம்பன்ன வித்வான்களின் சம்பாவ னையைச் செய்யும்படி கட்டளையிட்டனர். அவ்வண்ணமே ஆக்ஞைப்படி ஸ்ரீ திரிபுரசுந்தரீ சந்திரமௌளீசுவரர் திவ்ய ஸன்னிதியில் ஸம்பாவனையை ஆரம்பித்தனர். கனபாடிகளான பெரியோர்களுக்கு 10-ரூபாயும் பிறகு 7, 6 என்று மூன்று வித மாய் சுமார் 700 பெரியோர்களுக்கு அளிக்கப்பட்டது. பிறகு மத்தியான்னத்திற்கு மேல் பண்டிதர்களது ஸம்பாவனைக்கு குருமூர்த்தி வாசற்கொட்டகையிலமைக்கப்பெற்ற திவ்யாஸ னத்திலமர்ந்து கொடுக்கும்படிசெய்த ஆக்ஞைக்கிணங்க மைசூ ரிலிருந்தும் சென்னையிலிருந்தும் உதயபுரத்திலிருந்தும் வந்தி ருந்த பண்டிதோத்தமர்களுக்கு விலையுயர்ந்த சால்வைகளை ஸமர்ப்பித்தனர். பிறகு மற்றும் பற்பல தேசங்களிலிருந்தும் வந்திருந்த சுமார் 200 பண்டிதர்களுக்கு 25-ரூபாய்க்குக்குறை யாத சால்வைகளையே யாவருக்கு மனுக்கிரகித்தனர். இவ்வி தம் மேன்மையான மரியாதை, போஜனது காலத்தில் நடந்த தாய் மட்டும் சரித்திரத்தாலறிவோம். அச்சமயம் முற்கூறிய T. R. டாகர் என்பவருக்கு அனுக்கிரக புரஸ்ஸரமான ஸ்ரீமுகம் அளிக்கப்பட்டதை மகாசபையில் படித்துக்காட்டி மந்திராக்ஷ தையுடன் மதிப்புள்ள சால்வைபோற்றி அவரது கரங்களில் சேர்க்கப்பட்டது. அதில் T. R. என்பதற்கு "தாடங்க ரத்தி னம்" என்று பொருள் என்று வியாக்கியானம் செய்யப்பட்டு ஆகவே "தாடங்கரத்தினம் டாகர்" என்றழைக்கவேண்டுமென்று கண்டிருந்ததைக்கேட்ட யாவரும் பரமானந்தத்தை அடைந் தனர். அவ்வனுக்கிரக பூர்ணமான ஸ்ரீமுகத்தை அவர் பெற்றுக்

கொண்டு ஸன்னிதானத்தையும் ஸபையையும் வணங்கி பிரயாணமானர். இச்சமயம் நாம் ஆலோசிக்கவேண்டியது ஒன்றுளது இவ்விதமெல்லாம் ஸ்வர்ணவர்ஷத்தைத் தனது அனுக்கிரகமென்னும் கார்மேகத்தினின்று வர்ஷிக்கத்திருவுள்ளம் கொண்டமகேந்திரனுக்குக்கொப்பான நமதுபரமாசார்யருக்கு கவர்ண்மெண்டாரால் கொண்டுவரத்தயார் செய்யப்பட்டிருக்கும் தேவஸ்தானம் மடம் ஸம்மந்தமான மசோதா இச்சமயம் அனுஷ்டானத்திற்கு வந்திருந்தால் எவ்விதமாயிருக்கும்? இக்கருணாமேகம் இப்படி வர்ஷிக்க வாரம்பித்திருக்குமா? இம்மேகத்தை ஓட்ட இம்மசோதா சண்டமாருதமல்லவா ? இச்சண்டமாருதம் நம்தேசத்தில் நம் மதவெளியில்மட்டும் உலாவுவதாய்த் தோன்றியிருக்கிறதே! இதை அகற்ற நம்மால் முடியுமா ? இதற்கு நமக்கு தெய்வம் தான் உதவவேண்டும்.

सस्यानि स्वयमत्तिचेद्वसुमती मातासुतं हन्तिचेत्
वेला मंबुनिधिर्विलङ्घयति चेद्भूमिं दहेत्पावकः ।
आकाशं जनमस्तकेपतति चेदन्नं विषञ्चेद्भवेत्
अन्याय्यं कुरुते यदि क्षितिपतिः कस्तान्निरोद्धुं क्षमः ॥

பூமியே பயிர்களைத்தின்னவாரம்பித்தால் தாயே மகனைக்கொல்லயத்தனித்தால் ஸமுத்திரம் கரை புரண்டால் பூமியையே நெருப்பு எரித்தால் ஆகாயமே ஜனங்கள் தலையில் விழுந்தால் அன்னமே விஷமானல் அரசனே அனியாயம்செய்தால் இவர்களைத்தடுக்கயாரால் முடியும் என்றார். அதனல் இதற்கு தைவ சகாயமின்றி நடவாதென்றாயிற்று. ஆனல் இங்கு நமக்கு அரசன் அனியாயம் செய்தாரென்று கொள்ளத்தக்கதல்ல,

[இன்னும் வரும்.]

K. M. சுப்பிரமணியசாஸ்திரிகள்,